உ
சிவமயம்





# அமரர்
# செல்வன் ஆலாலசுந்தரம் சதீஸ்

அவரின் இறைவனின் அரவணைப்பில் சென்றமை குறித்த

# அமரகாவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அமரர்
# செல்வன் ஆலாலசுந்தரம் சதீஸ்
அவரின் இறைவனின் அரவணைப்பில் சென்றமை குறித்த
# அமரகாவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணம்



மானே மருக்கொழுந்தே
மங்காத ஒளிவிளக்கே
தேனே திரவியமே
தித்திக்கும் குலவிளக்கே
எம்வாழ்வு வளத்துக்காய்
பூம்புனலாய் பொழிந்தீரே
பனியாய் குளிர்ந்து மெழுகாய் உருகினீர்
குடையாய் நனைந்தீர்
கடலைப் போன்ற அரவணைப்பு
கற்றுணர்ந்த பாண்டித்தியம்
சுகங்களாய் உமது உதிரத்தை
எமக்களித்தீர் நாம் உள்ளத்தில்
நெய்யிட்டு இதயமதில் திரியிட்டுத்
தீபமேற்றி உமது பூப்பாதங்களில்
பாமாலையுடன் பூமாலை இட்டு
கண்ணீரைக் காணிக்கையாக்கி
உமது இதயமதில் இம்மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
அன்பு அன்னை
திரு. திருமதி. அருட்குமார்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அன்னை அரவணைப்பில்
21/01/1983

ஆண்டவன் அரவணைப்பில்
12/10/2006

# அமரர்
# செல்வன் ஆலாலசுந்தரம் சதீஸ்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு வியத்தில் புரட்டாதி திங்கள்
பூண்ட அபரபக்க சஷ்டியதில்
மாண்புடைய செல்வப்பாலகன்
ஆலாலசுந்தரம் சதீஸ் வியப்புடனே
பந்தமதை விட்டு எம்மானடி எய்தனனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவருட்பாக்கள்



## விநாயகர் துதி

பவளமால் வரையில் நிலவெறிப்பது போல்
பரந்த நீற்றழகு பச்சுடம்பில்
திவள மாதுடன் நின்றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித் தொருகரத்தில்
தரித்துயர் கிரிப்புறத் தொழுதுங்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்து கைதொழுவாம்

## தேவாரம்

ஒருவனாயுலகேத்த நின்ற நாளோ
வோருருவே மூவுருவமான நாளோ
கருவனாய்க் காலனை முன்காய்ந்த நாளோ
காமனையும் கண்ணளலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரிந்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே.

## திருவாசகம்

ஒப்பினக்கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிகின்ற ஒளியே
மெய்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோர் அன்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்புதற்கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
எய்ப்பிடித் துன்னை சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

## திருவிசைப்பா

செம்பொன் னே பவளக் குன்றமே நின்
திசைமுகன் மான்முதற் கூட்டத்
தன்பரானவர்கள் பருகும் ஆரமுதே
யத்தனே பித்தனே னுடைய
சம்புவே யணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே யெங்கும் ஒழிவற நிறைந்தே
திருக்கையி லிருந்தவா றியம்பே

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
நேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடியருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புட னடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கருவினுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து மதனாலே
கரிய குழல் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைத்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி
அரகரசிவாய வென்று தினமுநினை யாமல் நின்று
அறுசமய நீதி யொன்று மறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று
அநுதினமு நாண மின்றி யழிவேனோ

உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மானரங்கர்
உலக ளவு மால் மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபதங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவை மனை மீதிலன்று ஒருபொழுதுதூது சன்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர் சிறைமிளவென்று
பழனிமலை மீதில்நின்ற பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணிக்கவாசக சுவாமிகள்

### திருவாசகச் சிறப்பு (திருவாசகம்)

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடிபோற்றி
நேயத்தேநின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண் நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமா னநாம் விமலா
பொய் ஆயினவெல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞானமாகி மிளிஉகின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனம் கழிய நின்றமறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனேதேனார முதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஸ்கந்த குரு கவசம்

கலியுகத் தெய்வமே கந்தனுக்கு மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப் பொருளோனே
ஸ்கந்தகுரு கவசத்தைக் கலிதோசம் நீங்கிடவே
திருவடியின் திருவருளால் செப்புகின்றேன் காத்தருள்வாய்
சித்தி விநாயக ஐயமருள் போற்றுகின்றேன்
சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள் வாய்
கணபதி தாளிணையைக் கருத்தினில் வைத்திட்டேன்
அச்சம் தீர்த் தென்னை ரக்ஷித்திடுவீரே
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குஹா சரணம் சரணம்
குருகுகா சரணம் குருபராச ரணம்
சரண மடைந்திட்டேன் கந்தா சரணம்
தனைத்தா னறிந்து நான் தன்மயமாகிடவே
ஸ்கந்தகிரி குருநாதா தந்திடுவீர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்
அவதூத ஸத்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்
அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே
அறம் பொருளின்பம் வீடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை ஸ்கந்தகுருநாதா
சண்முகா சரணம் சரணம் ஸ்கந்த குரோ
காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா
போற்றி போற்றி ஸ்கந்தாபோற்றி
போற்றி போற்றி முருகா போற்றி
அறுமுகா போற்றி அருபதம் அருள்வாய்
தகப்பன் சாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்
ஸ்வாமி மலைதனில் சொன்னதனைச் சொல்லிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுருநாதா செப்பிடுவாய் பிரணவமதை
அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்
திக்கெல்லாம் வென்று ததிருச் செந்தில் அமர்ந்தோனே
ஆறுமுக ஸ்வாமியெ யுன்னை அருட்ஜோதியாய்க் காண
அகத்துள்ளே குமரா நீ அன்புமயமாய் வருவாய்
அமரத் தன்மையினை அனுக்ரஹித் திடுவாயெ
வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்
வேல்கொண்டு வந்திடுவாய். காலனை விரட்டிடவே
தேவரைக் காத்த திருச்செந்தி லாண்டவனே
திருமுருகன் பூண்டியிலே திவ்யஜோதி யானகந்தா
திருமலை முருகாநீ திடஞான மருள் புரிவாய்
செல்லமுத்தக் குமரா மும்மல மகற்றிடுவாய்
அடிமுடி யறிய வொணா அண்ணா மலையோனே
அருணாசலக் குமரா. அருணகிரிக் கருளிவா
திருப்பரங் கிரிகுஹனே தீர்த்திடுவாய் வினைமுழுதும்
திருத்தணி வேல் முருகா தீரனாய் ஆக்கிடுவாய்
எட்டுக்குடிக்குமரா ஏவல் பின்னி சூனியத்தை
பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்
எல்லாப் பலன்களும் எனக்குக் கிடைத்திடவே
எங்கும நிறைந்த கந்தா என்கண் முருகா நீ
என்னுள் ளறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்
திருப்போரூர் மாமுருகா திருவடியெ சரணமையா
அறிவொளியாய் வந்துநீ அகக்கண்ணை திறந்திடுவாய்
திருச்செந்தூர் ஷண்முகனெ ஜகத்குருவிற் கருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமலம் அகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானு பூதிதாரும்
சிக்கல் சிங்காரா ஜீவனைச்சிவ னாக்கிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றக் குடிகுமரா குருகுகனாய் வந்திடப்பா
குமரகிரிப் பெருமானே மனதையும் மாய்த்திடுவீர்
பச்சை மலை முருகா இச்சையைக் களைத்திடப்பா
பவழமலை ஆண்டவனே பாவங்களைப் போக்கிடபோ
விராலிமலை ஷண்முகனே விரைவில்நீ வந்திடப்பா
வயலூர் குமாரகுரோ ஞானவரயெனக் கருள்வீரே
வெண்ணை மலைமுருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்காம வேலவனே மனமாயை அகற்றிடுவீர்
காந்த மலைக்குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்த முரகாநீ மனத்தகத்தள் வந்திடுவீர்
கந்சமலைக் சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலைக் குருநாதா கவலையெல்லாம் போக்கிடுவீர்
வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்
வடபழனி யாண்டவனெ வல்வினைகள் போக்கிடுவீர்
ஏழுமலை யாண்டவனே எத்திக்கும் காத்திடுவீர்
ஏழ்மையகற்றி கந்தா அமபயம் போக்கிடுவீர்
அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
அறுபடைக் குமரா மயில்ஏறி வந்திடுவாய்
பணிவதே பணியென்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் கந்தா உன்பாதம் பணிதுவப்பேன்
அருட்பெருஞ் ஜோதியே அன்பெனக் கருள்வாயே
படர்ந்த அன்பினைநீ பரப்பிரம்பம் என்றனையே
உலகெங்கு முள்ளது ஒருபொருள் அன்பேதான்
உள்ளுயிராகி இருப்பதும் அன்பென்றாய்
அன்பேகுமரன் அன்பே ஸ்கந்தன்
அன்பே ஓமெனும் அருள் மந்திரம் என்றாய்
என்பே உள்ளத்திலே அசையாது அமர்ந்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாய் அன்பனால் வந்தருள் ஸ்கந்தகுரோ
யாவர்க்கும் இனியன் நீ யாவர்க்கும் எளியன் நீ
யாவர்க்கும் ஒளியன் நீ யாவர்க்கும் மானோய் நீ
உனக்கொரு கோயிலைஎன் அகத்துள்ளே புனைவேனே
சிவசக்திக் குமரா சரணம் சரணமையா!
அபாயம் தவிர்த்து தடுத்தாட் கொண்டருள்வாய்
நிழல் வெய்யில் நீர்நெருப்பு மண்காற்று வானதிலும்
பகைமையை அகற்றி அபயமளித் திடுவீர்
உணர்விலே ஒன்றி என்னை நிர்மலாம் மாக்கிடுவாய்
யானென தற்றமெய்ஞ் ஞானம் அருள்வாய் நீ
முக்திக்கு வித்தான முருகா கந்தா!
சதிர்மறை போற்றும் ஷண்முக நாதா
ஆகமம் ஏத்தும் அம்பிகைப் புதல்வா
ஏழையைக் காக்கநீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்
பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ
ஆதிமூலமே அருள்வால் உருவாய் நீ
அடியனைக் காத்திட அறிவாய்வந் தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனே நீ வா வா வா
தேவாதிதேவ சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ வந்திடப்பா
காண்ப யாவுமாய்க் கண்கண்ட தெய்வமாய்
வேதச் சுடரோய் மெய்கண்ட தெய்வமாய்
மித்தையாம் இவ்வுலகை பித்தையென் றறிந்திடச் செய்
அபயம் அபயம் கந்தா அபயமென்லறுகின்றேன்
அமைதியை வேண்டிய ஆறுமுகவா வாவென்றேன்
உன்துணை வேண்டினேன் உமையவள் குமரா கேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்
வேண்டிய துன்னருளே அருள்வதுன் கடனேயாம்
உன்அருளாலே உன்தாள் வணங்கிட்டேன்
அட்டமாக சித்திகளை அடியனுக் அருளிடப்பா
அஜபை வழியிலே அசையாம லிருத்திவிடு
சித்தர்கள் போற்றிடும் ஞானசித்தியும் தந்துவிடு
சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு
அருள்ஒளிக் காட்சியை அகத்தள்ளே காட்டிவிடு
அறிவை அறிந்திடும் அவ்வருளையும் நீ தந்துவிடு
அனுக்ரஹித் திடுவாய் ஆதிகுரு நாதா கேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்த குருநாதா!
தத்துவம் மறந்து தன்னையும் நான் மறந்து
நல்லதும் கெட்டதும் நானென்பதும் மறந்தும்
பாவபுண் ணியத்தோடு பரலோகம் மறந்திடச்செய்
அருள்வெளி விட்டிவனை அகலா திருத்திடுவாய்
அடிமையைக் காததிடுவாய் ஆறுமுகக் கந்தகுரோ
சிததியிலே பெரிய ஞானசித்தி நீ அருள
சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்
சிவானந்தம் தந்தருளிச் சிவசித்தராக்கிடுவாய்
சிவனைப் பொலென்னைச் செய்வ துன்கடனே
சிவசத் குருநாதா சிவசத் குருநாதா!
ஸ்கந்த குருநாதா கதறுகின்றேன் கேட்டிடுவாய்
தாளினைப் பிடித்தேன் தந்திடு வரமெனக்கு
திருவருட்சக்தியைத் தந்தாட் கொண்டிடுவாய்
சத்ரு பகைவர்களை ஷண்முகா ஒழித்திட்டு
கிழக்குத் திசையிலிருந்து க்ருபாகரா காப்பாற்றும்
தென்கிழக்குத் திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்
தென்திசையிலும் மென்னை திருவருளால் காப்பாற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மேற்கிலு மென்னை திறல்வேலால் காப்பாற்றும்
மேற்குத் திக்கிலென்னை மால்மருகா - ரக்ஷிப்பாய்
வடமேற்கிலுமென்னை மயிலோனே ரக்ஷிப்பாய்
வடக்கிலென்னைக் காப்பாற்ற வந்திடுவவ் சத்குருவாய்
வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே
பத்துதிக்குத் தோறுமெனைப் பறந்துவந்து ரக்ஷிப்பாய்
என்திசையையும் சிரசினையும சிவகுரேலா ரக்ஷிப்பாய்
நெற்றியும் புருவமும் நின்தருள் காக்கட்டும்
புருவங்களுக்கிடையே புருஷோத்மன் காக்கட்டும்
கண்க ளிரண்டையும் கந்தவேல் காக்கட்டும்
நாசிக ளிரண்டையும் நல்லவெல் காக்கட்டும்
செவிக ளிரண்டையம் செவற்கொடி காக்கட்டும்
கன்கங்க ளிரண்டையும் காங்கேயன் காக்கட்டும்
உதட்டினையும்தான் உமாசுதன் காக்கட்டும்
நாக்கை நம்முருகன் நயமுடன் காக்கட்டும்
பற்களைக் கந்தன் பலம்கொண்டு காக்கட்டும்
கழுத்தை ஸ்கந்தன் கைகளால் காக்கட்டும்
தோள்க ளிரண்டையும் தூயவேல் காக்கட்டும்
கைகள் விரல்களைக் கார்த்திகேயன் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன் காக்கட்டும்
மனதையும் முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும்
ஹருதயத்தில் ஸ்கந்தன் இனிதுநிலைத் திருக்கட்டும்
உதரத்தை யெல்லாம் உமைமைந்தன் காக்கட்டும்
நாபிகுஹயம் லிங்கம் நவையுடையக் குதத்தோடு
இடப்பை முழங்காலை இணையான கால்களையும்
புறங்கால் விரல்களையும் பொருந்தும் உசிர் அனைத்தையம்
உரோமத்து வாரமெல்லாம் உமைபாலா ரக்ஷிப்பாய்
தோல்ரத்தம் மஜ்ஜையையம் மாம்ஸமென்பு மேதஸையும்
ஆறுமுகமவா காத்திடுவீர் அமரர்தலைவா காத்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அஹங்காரமும்கற்றி அறிவொளியாயிருந்தும்
முருகா வெனைக் காக்க வேல் கொண்டு வந்திடுவீர்
பாபத்தைப் பொசுப்பிப் பாரெல்லாம் சிறப்புறவே
ஓம் ஸௌம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம் கலீம் என்றும்
க்ஸௌம் ஸௌம் நமஹவென்று சேர்த்திட்ட நாள்தோறும்
ஓமிரந்து நமஹவரை ஒன்றாகச் சேர்த்திடடா
ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி
ஒருமனத் தோடுநீ உருவையும் ஏத்திடடா
முருகனின் மூலமிது முழுமனத்தோ டேத்திட்டாய்
மும்மல மகன்றுவிடும் முக்கியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்லவேண்டாம்
முருகன் இரப்பிடமே முக்தித்தல மாகுமப்பா
ஹருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்த்ரம் ஏத்திவிடு ஏத்திவிடு
மூலமதை ஏத்துவோர்க்குக் காலபய மில்லையடா
காலனை நீஜயிக்கக் கந்தனைப் பற்றிடடா
சொன்னபடிகச் செய்தால் சுப்ரமண்ய குருநாதன்
தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்
ஜகமாயை ஜயித்திடுவே செப்பினேன் மூலமும்
மூலத்தை நீஜபித்தே முக்தனு மாகிடடா
அக்ஷர ரகஷமிதை அன்புடன் ஜபித்துவிடில்
எண்ணிய தெல்லாம் கிட்டும் எமபயம் மகன்றோடும்
மூவுலகுமட் பூஜிக்கும் முருகனருள் முன்னிதகும்
பூவுலகில் இணையற்ற பூஜ்யனு மாவாய்
கோடித்தரம் ஜபித்துக் கோடிகாண வேண்டுமப்பா
கோடிகாணச் சொன்னதை நீ நாடிடுவாய் மனமே
ஜன்மம் கடைத்தேற ஜபித்திடுவாய் கோடியுமே
வேதாந்த ரகசியமும் வெளியாக முன்னுள்ளெ
வேத சூக்குமத்தை விரைவாகப் பற்றிடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்ரம் மண்யகுரு ஜோதியாயுள் தோன்றிடுவான்
அருட்பெருஞ் ஜோதியான ஆறுமுக ஸ்வாமியுமே
அத்தர் முகமிர்து ஆட்கொள்வான் சத்தியமாய்
சித்தியையம் முத்தியையும் ஸ்கந்தகுரு தந்திடுவான்
நின்னையே நான்வேண்டி நித்தமும் ஏற்றுகின்றேன்
மெய்யறிவாகக் கந்தா தந்திடுவாய் இவனுள்ளேநீ
வந்திடுவாய் மருவிடுவாய் படித்தறி வாகவே நீ
பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா
பகுத்தறிவான கந்தன் பரஞ்குன்றில் இருக்கின்றார்
பழனியில் நீயும் பழம்ஜோதி யானாய் நீ
பிரமனுக் கருளியவா பிரணவப் பொருளோனே
பிறவா வரமருளி பிரம்மமய மாக்கிடுவாய்
திருச் செந் தூரில்நீ சத்திவேல் தாங்கிவிட்டாய்
பழமுதிர்ச் சோலையில் பரஞ்சோதி மயமானாய்
சுவாமிமலையிலே சிவசுவாமிக் கருளியக்
குன்றுகள்தோறும் குருவாய் அமர்ந்திட்டோய்
ஸ்கந்தக்கிரியை நீ சொந்தமாக்கி சொண்டனையே
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தாசரம ஜோதியெ
பிறப்பையும் இறப்பையும் பெயர்த்தக் காத்திடுவாய்
பிறவாமை என்கின்ற பெரவரம்நீ தந்திடுவாய்
தத்தவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்து நீ காத்திடுவாய்
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரணமடைந்திடேன் சடுதியில் வாருமே
சரவனண பவனெ சவண பவனே
உன்னரு ளாலெநான் உயிரோடிருக்கின்றேன்
உயிருக்குயிரானகந்தா உன்னி லென்னைக் கரைத்திடப்பா
என்னிலுன்னைக்காண எனக்குவரமருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீக்கிரம் வந்து சிவசக்தியும் தந்தருள்வாய்
இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன் நான்
இந்திரிய மடக்கி இருந்து மறிகிலேன் நான்
ஸ்கந்தா உன்திரவடியைப் பற்றினேன் சிக்கெனவே
சிக் கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமக் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்
நினைப்பெல்லாம் நின்னையெ நினைத்திடச் செய்திடுவாய்
திருமுருகா வுன்னைத் திடமுற நினைத்திடவே
திருவருள் தந்திடுவாய் திருவருள் தான் பொங்கிடவே
திருவருள் ஒன்றியே நிலை பெறச் செய்திடுவாய்
நிலைபெறச் செய்திடுவாய் நித்யானந்தமதில்
நித்யா னந்தமே நின்னரு வாகையினால்
அத்வை தானந்தத்தில் இமைப்பொழுது ஆழ்த்திடுவாய்
ஞான பண்டிதா நான்மறை வித்தகா கேள்
ஸ்கந்தகுருநாதா ஸ்கந்த குரு நாதா கெள்
மெய்பொருள் காட்டி மேன்மை அடைந்திடச் செய்
வினைகள் யாவையுமே வேல் கொண்டு விரட்டிடுவாய்
தாரித் திரியங்களையுன் தடிகொண்டு விரட்டிடுவாய்
துக்கங்க ளனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்தமாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியாய் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா
மெய்ப்பொருளாம் உன்னருளில் முருகா இருந்திடுவாய்
கண்கண்ட தெய்வமே கலியுகவரதனே
ஆறுமுகமானகுரோ அறிந்திட்டே னுன்மஹிமை
இக்கணமே வருவாய் என் ஸ்கந்தகுருவே நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் காத்திடவே எனக்கு நீ அருளிடவே
அரைக் கணததில் நீயும் ஆடிவரு வாயப்பா
வந்தென்னைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே
சுப்ரம் மண்யனெ சோகம் அகற்றிடுவாய்
ஞான ஸ்கந்தரே ஞானம் அருள்வாய் நீ
ஞான தண்டபணியே என்னை ஞானபண்டித னாக்கிடுவாய்
அகந்தையெலா மழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்புமயமாக்கி ஆட்கொள்ளு வாயப்பா
அன்பை என்னுள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு
அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்
உள்ளும் புறமும் உன்னரளாம் அன்பையே
உறுதியாக நானும் பற்றிட உவந்திடுவாய்
எல்லையில்லாத அன்பே இறைவெளி என்றாய் நீ
அங்கிங் கெனாதபடி எங்கும் அன்பென்றாய்
அன்பெ சிவமும் அன்பெ சக்தியும்
அன்பே ஹரியும் அன்பே பிரம்மனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்
அன்பே நீயும் அன்பே நானும்
அன்பே சத்தியம் அன்பே நித்தியம்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்
அன்பே மௌனம் அன்பே மோக்ஷம்
அன்பே பிரம்மமும் அன்பே அனைத்துமென்றாய்
அன்பிலாத இடம் அங்குமிங்கு மில்லை யென்றாய்
எங்கும் நிறைந்த அன்பெ என் குருநாதனப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரேதான்
ஸ்கந்தாசர் மத்தில் ஸ்கந்தகுரு வானான் காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தாசர் மத்தில் ஸ்கந்தகுரு வானான்காண்
மூவரும் வேரும் முனிவரும் போற்றிடுவே
ஸ்கந்தாச் ரமந்தன்னில் ஸ்கந்த ஜோதியுமாய்
ஆத்மஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்தகுரு
இருளை அகற்றிடவே எழுந்திட்ட எங்கள் குரு
எல்லை யில்லாத உன்இறை வெளியைக் காட்டிடுவாய்
முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ
உனையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்
நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்
விட்டிட மாட்டேன் கந்தா வீடதருள்வீரே
நடு நெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
பிரம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
சுழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்
சிவயோகி யாகஎனைச் செய்தடும் குருநாதா
ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்
மெய்யடியாராக்கி மெய்வீட்டில் இருத்திவிடம்
கொங்குநாட்டிலே கோயில் கொண்ட ஸ்கந்தகுரோ
கொல்லிமலை மேலே குமரகுரு வானவனே
கஞ்சமலை சித்தர்போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா
கருவூரார் போற்றும் காங்கேயா ஸ்கந்தகுரோ
மருதமலைச்சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்றிமலைக் குமரா சித்தர்க் கருள்வோனே
சிவவாக்கிய சித்தருனைச் சிவன் மலையில் போற்றுவரே
பழனியில் போகருமே பாரோர்வாழப் பிரதிஷ்டித்தான்
புலிப்பாணி சித்தர்களால் புடைசூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்தகுருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் அருள்வீரே
கற்றவர்க ளோடென்னைக் களிப்புறச் செய்திடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெங்கும் நிறைந்திருந்தும் கந்தகுரு உள்ள இடம்
ஸ்கந்தகிரி என்பதை நான் கண்டுகொண்டேன்
கண்டுகொண்டேன்
நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழனிமலை முருகாகேள்
கொங்கு தேசத்திலே குன்றுதோறும் குடிகொண்டோய்
சீலம் நிறைந்த சேலம்மா நகரத்தில்
கன்னிமார் ஓடையின்மேல் ஸ்கந்தகிரி அதனில்
ஸ்கந்தாச் ரமத்தினிலே ஞானஸ்கந்த சத்குருவாய்
அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமூலமானருரோ
அயர்ச்சியை நீக்கிடுவாய் என் தளர்ச்சியை அகற்றிடுவாய்
சுகவனே சண்முகனெ சுப்ரமண்ய ஜோதியெ
பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா
பரமானந்தமதில் எனமறக்கப் பாலிப்பாய்
மால் முரகா வள்ளிமணவாளா ஸ்கந்தகுரோ
சிவகுமரா உன்கோயில் ஸ்கந்தகிரி என்றுணர்ந்தேன்
ஜோதிப் பிழம்பான சுந்தரனே பழனியப்பா
சிவஞானப் பழமான ஸ்கந்தகுரு நாதா
பழம்நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ
திருவா வினன்குடாயில் திருமுரகனானையோ
குமரா முரகா குருகுகா வெலவனே
அகத்தியர்க் குத்தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை
கலியுக வரதனென்னு கலசமுனி உனைப் புகழ்ந்தான்
ஔவைக்கு அருள்செய்த அறுமுகா ஸ்கந்தகுரோ
ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும் தந்தருள்வாய்
போகருக் கருள் செய்த புவனே சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா
ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தகிரிஜோதி யானவனெ
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணை யுள்ளஸ்கந்தகுரோ
ஏழையைக் காத்திடப்பா ஏத்துகின்றேன் உன்நாமம்
உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்
புவனேச்வரி மைந்தா போற்றினேன் திருவடியை
திரவடியை நம்பினெ திருவடி சாக்ஷியாக
புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்
நின் நாமம் ஏத்துவதே நான் செய்யும் தவமாகம்
நாத்தழும் பேறவே ஏற்றிடுவன் நின் நாமம்
முருகா முரகா வென்ற மூச்செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஓம் முருகனையே காண்பேன்
அங்கிக் கெனாதபடி எங்கும் முருகனப்பா
முருகன் இல்லாவிட்டால் மூவுலகம் மேதப்பா
அப்பப்பா முருகா நின் அருளே உலகமப்பா
அருளெல்லாம் முருகன் அன்பெல்லாம் முருகன்
ஸ்தாவர ஜங்கரமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்
முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு
ஸகந்தாச் ரமமிருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்
சரணம் அடைந்தவர்கள் ஸாயுஜ்யம் பெற்றிடுவீர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லை யப்பா
வேதங்கள் பொற்றிடும் வடிவேலன் முருகனை நீ
சந்தேக மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்தியமான தெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா
வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ
சந்தேகமில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமான தெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியமம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா
சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல
ஸ்கந்தகுருவே ஸத்தியம் ஸத்தியமே ஸ்கந்தகுரு
சத்தியமாய்ச் சொன்னதைச் சத்தியமாய் நம்பியெ
சத்தியமாய் ஞானமாய் சதானந்தமாகிவிடு
அழிவற்ற பரம்மமாய் ஆக்கிடுவான் முருகன்
திருமறைகள் திருமுறைகள் செப்புவதும் இதுவேதான்
ஸ்கந்தகுரு கவசமதைச் சொந்தமாக்கிக் கொண்டு நீ
பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்
பிறபிப் பிணியகலும் ப்ரம்ம னந்தமுண்டு
இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னை போற்றிடுவர்
மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடன் ஜபித்திடப்பா
சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்
கவசம் ஒத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்
கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமேநீ
ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தொன்றி ஏத்துவோர்க்கு
அஷ்டைச் வர்யந்தரும் அந்தமில்லா இன்பந்தரும்
ஆல்போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேரோடிடுவன்
வாழையடி வாழையைப் போல் வம்சத்தைப் பெற்றிடுவேன்
பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்ந்திடுவன்
சாந்தியும் சௌக்கியமும் ஸர்வமங்களமும்ம பெருகிடுமே
ஸ்கந்தகுரு கவசமிதைக் கருத்திறுத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமக் ரோதம் கலிதோஷ மகற்றுவிக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம்பொருள் இன்பம்வீடு அதிசுலபமாய்க் கிட்டும்
ஆசாரம் சீலமுடன் அதிநேம நிஷ்டையுடன்
கள்ளமில்லா வுளத்தோடு ஸ்கந்தகுரு கவசந்தனை
சிரத்தா பத்தியுடன் சிவகுமரனை நினைத்துப்
பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் கந்தனையும்
கந்தகுரு கவசமிதை மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒருமனதாய் பகருவீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும் நின்று
காத்திடுவான் கந்தகுரு கவலையில்லை நிட்சயாய்
ஞானஸ் கந்தனின் திருவடியை நம்பியே நீ
கந்தகுரு கவசந்தனை ஓதுவதே தவமெனவே
உணர்ந்து கொண்டு ஓதுவையேல் உனக்குப்பெரிதான
இதபர சுகமுண்டாம் ஏன்னாளும் துன்பமில்லை
துன்பம் அகந்றுவிடும் தொந்தரவு நிங்கிவிடும்
இன்பம் பெருகிவிடும். இஷ்டசித்தி கூடிவிடும்
பிறவிப் பிணியகற்றி பிரம்மநிஷ்டையும் தந்து
காத்து ரகூஷிக்கும் ஷ்கந்தகுரு கவசமே
கவலையை விட்டுநீ ஸ்கந்தகுரு கவசமிதை
இருந்த படியிருந்து ஏத்திவிடு ஒத்தினாய்
தெய்வங்கள் தேவர்கள் சித்ரர்கள் பக்தர்கள்
போற்றிடுவர். ஏவலுமே புரிந்திடுவர் நிட்சயமாய்
ஸ்கந்தகுரு கவசம் சம்சயப்பேயோட்டும்
அஞ்ஞானமு மகற்றி அருள்ஒளியும் காட்டும்
ஞான ஸ்கந்தகுரு நானென்று முன் நிற்பன்
உள்ளொளியாயிருந்து உன்னிலவே ளைகிடுவன்
என்னில் உனைக்காட்டி உன்னில் தினைக்காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்த யோதி யானகந்தன் கந்தகிரி யிருந்து
தண்டாயுதம் தாங்கித் தருகிறான் காட்சியுமே
கந்தகிரி வந்துநிதம் கண்டுய்மின் கேத்ரே
கலிதோஷ மகற்றுவிக்கும் ஸ்கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்து பாரில் புகழ்பெறுமின்
ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பாரம் கொடுக்கும்
ஒருதரம் கவஷமோதின் உள்ளளுக்குப் போகும்
இருதரம் ஏத்துவீரேல் எண்ணியதெல்லாம் கிட்டும்
மூன்றுதரம் மோதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு
நான்முறை யோதி தினம் நல்லவரம் பெறுவீர்
ஐந்துமுறை தினமோதி பஞ்சாக்ஷரம் பெற்று
ஆறுமுறை யோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்
ஏழுமுறை ஏத்தின் அட்டமா ஸித்திகிடும்
ஒன்பது தரமோதின் மரணபயமொழியும்
பத்துதர மோதிநித்தம் பற்றறுத்து வாழ்வீரே
கன்னிமார் ஒடையிலேநீராடி நீறுபூசி
ஸ்கந்தகுரு கவசமோதிகந்தகிரி ஏறிவிட்டால்
முந்தை வினையெல்லாம் கந்தன் அகற்றிடுவான்
நிந்தைகள் நிங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்
கன்னிமார் ஓடைநீரைக் கைகளிலே நீ பெத்துக்
கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுருவேற்றி
உச்சியிலும் தெளித்த உட்கொண்டு விட்டால் உன்
சித்தபலம் ஒடுக்கும். சித்தசுத்தியும் கொடுக்கும்
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிப்டுக் கந்தகிரியேறிடுவீர்
கந்தகிரி யேறிஞான ஸ்கந்தகுரு கவசமிதைப்
பாராயணம் செய்துலகில் பாக்கமெல்லாம் பெற்றிடுவீர்
(மும்பலம் அகலம், முக்திவரும், காலபயமில்லை, பாக்கியம் கிட்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் தவிப்பு

என் கண்ணே கலைமானே ஆசை மகனே அன்பான பாலகனே நேசத்திரவியமே என் ராசாவே என்னை இங்கு விட்டு நெடும் பயணம் போனதென்ன?

கண்ணே கண்மணியே கற்கண்டே தேனே தெவிட்டாத என் நறும்பாகுச் செல்வமே ஆசைப் புத்திரனே நான் எப்படி அழைத்திடுவேன். எப்படித்தான் எடுத்து உரைப்பேன் மைந்தா.

ஐயிரண்டு திங்கள் அங்கமெலாம் நொந்து நோன்புகள் இருந்து பெற்ற என் ஆசைப் பாலகனே. உம்மைச் சீராட்டி வளர்த்து பெரியவனாய் ஆளாக்கி. என்மனம் குளிரும் வேளை என் அன்புச் செல்வமே என்னை விட்டுப் போனாயய்யா. அன்னையவள் படும் துயரம் தெரிகிறதா என் செல்வமகனே. தெரிகிறதா என் ஆசைப்புத்திரனே. கடவுளும் எனைக்கைவிட்டான். நானோ கதறி அழுகின்றேன் காலமெல்லாம். தாயில்லாமல் நானில்லை என்பீர் என் அன்பே தாயென்ற ஒரு தெய்வம் வீட்டோடு இருக்க தனித்தனியே ஏன்தான் கோயிலுக்கு அலைய வேண்டுமம்மா என்பாய் செல்வமே அதுமட்டுமா என்செல்வமே உமது வாய்மொழியாகக் கூறுவாயையா பெற்றெடுத்த உள்ளம் என்றும் தெய்வம். அவர் பேசுகின்ற வார்த்தை என்றும் மௌனம் என் ஆசைப் புத்திரனே இந்த வாசகவாய் மொழிகளைத் தான் இந்த படுபாவி எங்கேதான் கேட்பேன் என்பாசத்தின் பிணைப்பே பாலகா இவையெல்லாம் என் மனவானில் பறக்குதையா. பறக்கிறது என் அன்புச் செல்வமே. மணக்கோலம் காண இருந்த அன்னை மனம் வேகுதையா வேகுது என்செய்வேன் என் செல்வமே கட்டிலெங்கே மெத்தையெங்கே அன்னையின் கனவுகள் தானெங்கே எல்லாமே முடிந்ததையா என் பாலகனே. ஐயா நான் பட்ட துயரம் யார் கேட்பார் யார் அறிவார் என் ஆசை மகனே. நீர் இல்லாமல் நாளும் பொழுதும் உம் நினைவால் வாடி வதங்குகிறேன் என் அன்புச் செல்வமே. என் கண்ணே பொன்னான உன் இதயம். பூப்போன்ற உந்தன் பார்வை. மின் போன்ற உமது அறிவு. மெய்சிலிர்க்கும் உமது ஆற்றல். மண்போற்றும் உன் வேகம். மாண்பு மிகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை தாயுடன் பள்ளிப் பருவத்தில் தனது பிறந்தநாளை கொண்டாடும் போது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை. எழில்மாறா உன்வடி. ஏறுநடை உள்ளம் ஆண்மகனென்ற வீரமெல்லாம் ஒன்றொன்றாய் நினைத்திடவே உள்ளம் வெந்து துடிக்கிறதே என் ஆசை மகனே. கட்டியணைத்து முத்தமிடும் என் இதயமே ஏன்தான் இன்னும் என்னை இங்கு விட்டாய் என் பாலகனே பாவிதனை அழைத்திடய்யா அணைத்திடய்யா என் ஆசை மகனே. என் ஆசை மைந்தா இல்வாழ்வில் புகுந்து இனிய கனவுகள் நிறைவேறாது இடையிலே பறித்தான் படுபாவித் தெய்வம். உம்மை நினைத்தே நான் விளக்கேற்றி பூவைத்து வந்தேன். அவனோ இடையிலே பறித்தான். என் ஆசைப்புத்திரனே நானோ கொடுத்து வைக்காத பெரும்பாவி யானேன். என்னையும் அணைத்திடய்யா. ஆசை மகனே இன்முகமும் சிரிப்பும்தான்இறுதிவரை காட்டிவிட்டு சிரிப்புடனே சென்றாயையா என் செய்வேன் என்பாலகனே பாவி நான் பரிதவிக்கின்றேன். ஐயா நானோ கொலை மனைக்குள் விழுந்து விட்டேன். நான் போக இருந்த வேளை நீர் போனதென்ன. கடவுளுக்கும் தாங்காது கட்டியே போட்டு. எட்டியே உதைத்து ஏணியையும் தள்ளிவிட்டு. தந்தவன் பறித்துக் கொண்டு. தவக்கோலம் தந்தும் விட்டான். இனியும் என்னை நோகாமல் இதுவரை பட்டது போதும் என் ஆசைச் செல்வமே என்னையும் அணைத்திடய்யா. ஆசை மகனே 50வயது தனில் அருகிருந்து தேற்றும் வேளை உமை இழந்து நான் உயிருடன் போராடுகின்றேனய்யா பல தடவை என்னை பல இடங்கள் கொண்டு சென்று உயிரை விட்டுப் பிரியாது காத்தீர்களே உங்களுடன் இருப்பேனென்று. இப்போ என்னை இந்நிலையில் விட்டுவிட்டு தனிவழியே சென்றீரே என் ஆசைப்புத்திரனே. நானோ உமக்காகத்தான் இருந்தேன் இனி வேண்டாம் இந்த நிலை. ஆசை மைந்தா அணைத்திடய்யா. ஆசைமைந்தா உமது மனத்தின்கண் எழுகின்ற ஐம்புலன்களின் உணர்வினால் வரும் துடிப்பையும் செயலையும் நான் பார்க்காமல் இருப்பதற்கு ஒரு குருடியாக இருந்திருக்கக் கூடாதா என் செல்வமே. இல்லை உமது மனமார்ந்த இனிய வார்த்தைகளைக் கேட்டு மகிழாத செவிப்புலன் அற்றவளாக இருந்திருக்கக் கூடாதா? நான் பெற்ற பாக்கியம் இவை இல்லையெனில் உமது செயல்பாடுகளையும் வார்த்தைகளையும் நான் கண்டு களிப்படையா பாவியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கலாம். நீர் நடக்கும் நடையிலே உமது வேகத்தையும் தேவைகளையும் புரிந்து செயல்ப்படும் உமது அன்னைக்கா இந்த நிலையடா என் செல்வப்புத்திரனே உமது நினைவிலே வாடி வதங்கி சோர்ந்து கிடக்கின்றேன். என்னுயிர் ஆசை மகனே செல்வமே ஏன்தான் இங்குவிட்டாய் என்னையும் உம்முடன் அணைத்திடுவாய் என் செல்வமே.

உமது உடம்பைக் கவனிக்காது உள்ளவரை நாட்டின் நலனுக்கு நல்லது செய்ய நினைத்த என்னுயிருக்கா இந்த வேதனை. என்னுயிரைப் பறிகொடுத்து நிற்கின்றேன் என் செல்வப் புத்திர பாக்கியமே.

என் ஆசைப்பாலகனே உமது மதிவதனமும் சிரிப்பும் எங்கே வீறுபோட்ட நடை எங்கே? நேரான உமது பாதைதான் எங்கே எல்லாமே என் மனதில் வேகுதய்யா வேகுது எங்கிருந்து வந்த போதும் உமது களைப்பையும் பாராது தலை தடவி கட்டியணைத்து முத்தமிடும் என் அன்பு இதயமே நான் பைத்தியக்காரியாய் பாலைவனத்தில் கிடக்கின்றேன். யார்தான் என்கதி கேட்கவும், பார்க்கவும் உண்டு சொல்லய்யா. சொல்லும் என் செல்வப்புத்திரனே அப்பா இல்லாத இடத்து அன்று கவலை கொண்டோம். அதற்கு நானுண்டு என மார்பில் தட்டினீர். அம்மாவை நான் வைத்துப் பார்ப்பேன் கடைசிவரை என அக்காவுடன் கூறுவீர். இப்போ என்னை தனியேவிட்டு விட்டு சென்றீர். இனி வேண்டாம் என்னையும் அணைத்திடுவாய் ஆசை மைந்தன்.

உன் உடன்பிறப்பிற்கு உறுதுணை தேடி சிறப்புடன் வாழ்த்தி வைத்தீர். உமக்கு உடன்பிறப்பு உறுதுணை தேடமுன்பே இக்கதியா எனக்கு. கடவுளுக்கும் பொறுக்கவில்லை அவனும் எனைக் கைவிட்டான் யாரிடம் கூறுவேன். கண்ணீராய்ச் சொரிகின்றேன். என்னையும் அழைத்திடய்யா என் அன்பு மைந்தன்.

ஆசைப் புத்திரனே என் செல்வமைந்தா என்னவென்று கூறி எடுத்து இயம்பிடுவேன் தோழோடு தோழ் நின்ற உமது தோழன்மார் (நண்பர்கள்) நீர்போன இடியினாலும் மின்னலினாலும் முகங்கள் உருக்குலைந்தும் தடி கொண்டடித்த பாம்பாய் உடலும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். நீங்கள் யாவரும் ஒரு கூட்டில் ஒட்டி உறவாடி வாழ்ந்த அன்புச் செல்வங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போ சிறகை உடைந்து பறக்க முடியாமல் திகைத்து நிற்கின்றனர். சுதந்திரமாய் வானில் பறந்தவர்கள் நீங்கள் இப்போ மனவேதனை தாங்க முடியாமலும் துடிப்பிலும் உள்ளனர் உமக்கு அமைந்த நண்பர்கள் என் செய்வேன் என்பாலகனே. எல்லாமே முடிந்ததய்யா என்தலையில் விழுந்ததையா இடி. மின்னி மறைந்ததையா கடவுளும் பொறுக்காமல் தன்வசம் ஆக்கிவிட்டான் என்பாலகனே நான் பெற்ற பாக்கியமே தினம் தினம் வீட்டோடு நின்று எமது நிலை பார்க்கவா இங்கு கூட்டி வந்தாய் உமது நண்பர்களை. இப்பொழுதும் கனவிலும் கூடி நிற்கின்றீரே என்முன். கதைகளும் பேசுகின்றாய் என் மனம் தாங்குமா சொல்லையா சொல். தீசுட்ட என் இதயத்தில் தேள் நித்தம் நித்தம் கொட்டிடுகிறதய்யா என் செல்வமே இவ்வளவும் எடுத்துரைத்தேன் இன்னும் கூறின் முடிவே இல்லையையா என் ஆசைப்பாலகா வேதனையில் வேகும் உனது அன்பு அன்னையை அழைத்திடுவாய் என் அன்பு மைந்தா அணைத்திடுவாய். வேறுவழி எனக்கில்லை என் செல்வமே வேகுதையா என் இதயம்.

என் ஆசைப்புத்திரனே எனது கண்கள் கலங்காது கவலைகளைத் துடைத்தாய். இப்போது நான் கண்ணீரில் நனைவதையும் துடிப்பதையம் யார் கேட்பார், யார் அறிவார். என்னுயிர்க்கு இனியேதும் இல்லையய்யா என் ஆசை மைந்தா உன் நாமம் தான் என் நேரமும் ஏத்துகிறேன். என் ஆசைப் புத்திரனே. உன் நினைவையன்றி வேறொன்றை ஒருபோதும் நினைத்ததில்லை. என் கண்ணே கலைமானே காவியமே என் ஓவியமே எப்படித்தான் இங்கு விட்டீர் என் பாலகனே பாவியாய் உள்ள உன் அன்னை உயிருடன் போராடுகிறேன் இந்த ஏழையன்னையை அழைத்திடுவாய் என் ஆசை மகனே அணைத்திடுவாய் என் ஆசைப்புத்திரனே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த சகோதரி வட்டக்கச்சி

அகத்தினில் என்னையென்றும் மறவாது உறவாடும் என்
அன்பான தம்பியே சிலவருடங்கள் நான் இடம் பிரிந்து
இருந்தாலும் ஓடோடி வந்து உன்னை பார்த்துத்தான் சென்றேன் தம்பி
வானொலிச் செய்திதனைக் கேட்டவுடன்
பரிதவித்துப் போனேனடா ஏனிந்த கதிநமக்கு! முகம் பார்க்கமுடியலையே
இறுதி தகனமதை காண்புற்றிருந்தால் துன்பமது தீர்ந்திருக்கும் தரணியிலே
வாழும் வரை துன்பமது தீராது என்னதான் செய்வேனோ?

## அத்தார் வட்டக்கச்சி

சாந்தமான மைத்துனனே
கடல் கடந்து இருந்தாலும்
வரும்போது உறவாடும் இனிய பேச்சை
எப்படி மறப்பது யாரிடத்தில் கேட்பது
இடி விழுந்த செய்தியதை கேட்டவுடன்
படிபிறங்க வைத்ததுவே உண்மையா என்று...

## மருமக்கள் : கர்ஷனா, கோபிநாத், கேசவன்

கடல் கடந்து வந்து நாம் கட்டியணைத்து முத்தமிட்டு
குதூகலமாய் சிவராம் காலத்தை கழித்தோமே
இனிவந்து நாங்கள் அணைத்து முத்தமிட மாமாதான்
யார் உண்டு எப்படி மறப்பது எங்கள் அன்பு மாமாவை
எங்கு சென்றீர்கள் மாமா மாமா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாசமிகு தாயின் அரவணைப்பில் ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரியின் திருமண வைபவத்தின்போது உறவுகளுடன்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய சகோதரி

எங்களை விட்டுப் பிரிந்து என்னைத் தனிமையாக்கி சென்றுவிட்ட எனது பாசமிகு. அன்புமிகு தம்பியே! நினைக்கும் போது மனம்... தாங்கமுடியாத வேதனையில் தள்ளாடுகின்றது. தம்பி வீட்டில் எங்கு பார்த்தாலும் உன் முகம்தான் தெரிகின்றது. தம்பி நான் இவ்வளவு காலமும் எனக்கு ஏற்பட்ட கஸ்ரம் நோய் நொடி என்பனவற்றுக்கெல்லாம் நீரே தோள் கொடுத்து நின்றாயடா அம்மா நோயுற்ற காலத்தில் என்னுடன் கூடி நீயும் கொண்டு சென்று காட்டாத இடங்களும் இல்லையடா தம்பி உன் வரவை எதிர்பார்த்தபடி இருக்கும் அம்மாவுக்கும் எனக்கும் இனி யாரடா தம்பி. இப்படி இருக்கப் போகின்றார்கள். தம்பி என் திருமண வைபவத்தை தந்தையாகவும். தமையனாகவும். தம்பியாகவும் நின்று உன்னுடைய மூச்சிலேயே நின்று இன்பங்களையும் சந்தோசத்தையும் காட்டினாய் தம்பி. என்னுடனும் அம்மாவுடனும் கொஞ்சி விளையாடும் குழந்தையாகவே வளர்ந்துவந்தாயடா. உன்னுடன் கூடிவரும் சினேகிதர்களின் எண்ணிக்கையும் அவர்களுடன் வந்து சந்தோசம் கொண்டாடுவதையும் இரவு பகல் பாராது எண்ணி எண்ணி வேதனை அடைகின்றேன். சினேகித முறையில் அவர்கள் சகோதரர்கள் போல் வீட்டிற்கு வரும்போது மனம் வெந்து போகின்றது. என்னதான் செய்வேன் கூடி வருவாயாடா தம்பி. எனது குழந்தையை தொட்டிலில் இட்டு அழகுபார்த்து முருகனிடம் சென்று பாலும் சோறும் ஊட்டி வைத்து இன்னும் பல... தம்பி. என்குழந்தை மாமா என்று கூப்பிடுவான் ஓடி வந்து பார்த்து முத்தம் கொடுப்பானே இனி யார்தான் தம்பி என் குழந்தைக்கு மாமா... எனது மனதில் உள்ளவற்றை எல்லாம் எப்படி எழுதுவது ஒன்றா இரண்டா நிகழ்ச்சிகள் அவை எண்ணிலும் அடங்கா எழுத்திலும் அடங்கா தம்பி. அம்மா படும் வேதனையை நான் நாளும் பொழுதும் பார்த்து வேதனை அடைகின்றேன் தம்பி. வரும் போதெல்லாம் ஏதோ ஒரு கதையுடன் தானே வருவாய் அக்கா அக்கா எனக் கூப்பிட்டு கதை கூறுவதையும் எண்ணுகின்றேன். என்னை அக்கா என்று கூப்பிட என் உயிரான உறவு இல்லையே தம்பி தம்பி.... எப்படி என்னால் தாங்க முடியும் உன்நடையும் துடுப்கான கனிவான பேச்சையும். நயன நடையையும் போட்டு எப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அக்கா என்று அழைப்பாயடா. தம்பி எல்லோரையும் அன்பாலே சொரிந்து அழைக்கும் அத்தாரும் நானும் என்ன தான் செய்வோம் தம்பி. என் குழந்தையும் உன் முகம் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. நான் உன்னை வைத்து பார்க்க கொடுத்து வைக்காத படு பாவியாகியுள்ளேன் தம்பி. என்னிடம் வந்து போவாயாடா தம்பி... தம்பி....

## அன்பான அத்தார்

என் அன்பான மைத்துனனே!
என் உயிரின் சகோதரனே
மைத்துனன் என எண்ணவில்லை - என்
சகோதரனாகவே எண்ணி இருந்தேனடா
உன்னுடைய மரியாதைக்கும் சகிப்புத் தன்மைக்கும் கடவுள் என்னுடன்
இருப்பதற்கு விடவில்லையடா. நடந்தவற்றை எப்படி மறப்பது
எப்படி எழுதுவது எழுதமுடியவில்லையடா இத்தனை வயதளவில்
இப்படியொரு இழப்பா? எப்படித் தாங்குவேன் எவரிடத்தில்
எடுத்துரைப்பேன் உன் அம்மாவுக்கும் அக்காவுக்கும் யார்தான் ஆறுதல்
கண்ணீர் மறைக்கும் கண்களில் உன் உருவம் தெரிகின்றதே ஓடிவந்து
அத்தார் என கூப்பிட எப்போ வருவாயடா நான் என்ன செய்வேன்
எதனைத் தருவேன் கண்ணீர் அஞ்சலியைத் தவிர.

## அருமை மருமகன் ஷானுஜன்

என் ஆசை மாமாவே!

தொட்டிலிலே என்னைப் போட்டு - ஆசையோடு சோறும் ஊட்டி சோடினைகளும் போட்டுவிட்டு அழகுபார்த்து தோழ்மீது எனைச்சுமந்து தாலாட்டி தூங்கவைத்து குதூகலமாய் மழலை மொழி சிலவும் கேட்டு தேடியே கிடைக்காத எனது ஆசை மாமாவே! இனியார் என் மழலை கேட்பதற்கு உங்களைப்போல் வருவார்கள். நான் பார்த்து கதைப்பதற்கு பால்மறவா பாலகன் நான் திடுக்கிட்டு தேடுகின்றேன் என் உயிரே மாமாவே. ஓடிவாருங்கள் என் ஆசை மாமாவே. என்னிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தப்பா அனுதாபம்

தாரகைகள் நடுவே சந்திரன் போன்று
தலைவைத்து நின்றாய் ஆரமுதே எங்கள் அரிய
பெறாமகனே அன்பினைச் சொரிந்திட்ட தேனே
காரம் நிறை வார்த்தைகள் கனவிலும் அறியாது
கனிமனத்தோடு உறவாடினாய்
இப்புவிதனில் நாம் வாழும் வரை உம் நினைவால் வாடுகிறோம்

## மச்சான்மார், மச்சாள்மார்

இன்முகமும் சிரிப்பும் இறைவன் கொடுத்த வரம்
என்று இருந்தோம் மைத்துனா
பாசமும் பண்பும் பலரிடம் பழகும் தன்மையும்
உங்கள் இயல்பான பண்பு என்றும் எவ்விடத்தும்
எம்மை அழைத்து அரவணைத்து நின்றீர்கள்
இனி நாங்கள் யாரைப் பார்ப்போம் கேட்போம்
தாங்களின் பிரிவால் தவிக்கின்றோம்
தரணியிலே தவிக்கின்றோம்.

## தாய் தந்தையின் உடன் பிறப்புகள்

ஆதி உமை பெற்றெடுத்த ஆரமுதே ஆதரிக்க யாருமில்லை செல்வமே
பாதிதனில் நீ பிரிந்ததால் காலமெல்லாம் கதறுகின்றோம்
ஞாலத்தின் உமது அன்பை யார் நிழலில் பெற்று நிற்போம்
காலம்தான் பகைத்ததுவோ கடிந்துயிரைப் பறித்ததுவோ
பூமித்தாய் உமை இழந்து புழுவாகத் துடிக்கின்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகக் கொண்டு வசித்து வந்த ஆலாலசுந்தரம் - சதீஸ் என்பவரை எனக்கு நன்றாகத் தெரியும் இவர் சிறுவயதில் இருந்து என்னுடன் அன்பாகவும், அமைதியாகவும், பண்பாகவும் பழகிய சிறுவன் ''தந்தை எவ்வழியோ மைந்தனும் அவ்வழியே'' என்பார் பெரியோர் தந்தையின் குணாதிசயங்களையும், பொது விடயங்களிலும் ஈடுபாடு உள்ளவராகவும் காணப்பட்டார் இவர் சிறுவயதிலே முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதற்கு எடுத்துக் காட்டாக நாட்டின் நற்பிரஜையாக இருக்க வேண்டியவர் பச்சிழம் வயதில் இறைவனடி சேர்ந்தமை அன்பானதாய், அருமை சகோதரிகள், மைத்துனர் மருமக்கள் உற்றார் உறவினர் ஆகியோருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் குடும்பத்தில் அமைதி சாந்தி நிலவ அமரரின் ஆன்மா சாந்தியும், மோட்சமும் பெற இறைவனை வேண்டி நல்லாசியும் கூறி நிறைவு செய்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பிரம்ம ஸ்ரீ கா. புவனேந்திர சர்மா
(மணி ஐயா)
மத்தி - கிழக்கு.
இந்துமத குரு - நெடுந்தீவு.

# இளைப்பாறாத இரங்கல்

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த திரு ஆலாலசுந்தரம் - சதீஸ் அவர்களின் அகாலமரணம் எமது தீவகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்திய ஒரு சோகமான நிகழ்வாகும். இவரது பிரிவு இவரின் குடும்பதினரை ஆறாத சோத்தில் ஆழ்த்தியுள்ளதை அறிய முடிகினற்து. ''காலம் சிறந்த குணமளிப்பதாகவுள்ள'' என்னும் பழமொழிக்கமைவாக உருண்டோடும் காலச்சக்கரம் இவர்களது சோகத்தை ஆற்றுவதாக இத்தீவகத்தில் இறை பணி செய்பவன் என்ற ரீதியில் இக்குடும்பத்தினரின் இன்னல்கள் தீரவும், அவர்கள் இறைவனின் பராமரிப்பை உணரவும் இறைவனிடம் வேண்டி நிற்கின்றேன்.

பாங்குத் தந்தை
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரியின் திருமணப் பதிவின்போது தனது சகோதரி, மைத்துனருடன்



சகோதரி, மைத்துனர் பல்லுகொழுக்கட்டை கொட்டும்போது
ஆசை மருமகனுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாலம் உள்ளவரை நினைவில் நிறைந்திருப்பான் சதீஸ்

பிறப்புக்கள் எல்லாம் இறப்புக்கள் ஆகாத இயற்கை அது ஆண்டவன் நியதி இதனை யாரும் தடுத்து விட முடியாது சதீஸின் இழப்பானது என்றும் ஈடு செய்ய முடியாதது எமக்குள் நாம் கூறுகின்ற தேற்றுதல் வார்த்தைகள் எல்லாம் துயரத்தை மீட்டுவதாகவே அமைவதை உணர்கின்றேன். இளம் பராயத்திலேயே கருணையுள்ளம் கொண்ட நல்ல சமூக சேவையாளனை இளம் தளிரில் இழந்து விட்டோம் சுற்ற உறவுகள் கூடி தவிக்கின்றோம் ஜீவிதத்தில் ஏற்பட்ட பிணைப்புக்கள் எல்லாம் உதறித்தள்ளிவிட்டு நொடிப் பொழுதில் பரமன் திருப்பாதம் காலன் சேர்த்த மயக்கத்தினால் ஆறுதலும் தேறுதலும் தமக்கின்றி பரிதவிக்கும் குடும்பத்தாற்கு எனது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு சதீஸின் ஆன்மா எல்லாம் வல்ல கரமத்தைக் கந்தன் உடனிருக்க இறைஞ்சுகின்றோம் இறைவன் திருப்பாதம்.

**சி.தில்லையம்பலம்**
**தலைவர்**
**(ப.நோ.கூ.சங்கம்)**
**கரம்பத்தை கந்தன் ஆலய பரிபாலன சபை**
**நெடு. மேற்கு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இனிய தோழன் சதீஸ் இன்னமும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பதாய்...

மரணம் ...!
அது பிறக்கும் போதே... பிறந்ததில் இருந்து
எப்போதும் நிகழ்வதற்கான மனிதவிருப்பங்களுக்கு மாறான
கிழித்தெறியப்படமுடியாத ஒரு கட்டாய ஒப்பந்தம்!

எம் தேசமும் எமது மக்களும் இன்று எதிர்கொள்ளும் வாழ்வியல் என்பது மரணம் நிகழ்ந்து விடுமோ...? நிகழாதிருக்குமோ..? என்ற நிகழ்தகவு வாழ்க்கையின் அடிப்படையாகிவிட்டது.

இந்த நிர்ப்பந்தங்களை எதிர் கொண்டு மட்டுந்தான் எம் தேசத்து மக்களின் உயிர் வாழும் உரிமை இருந்து கொண்டிருக்கின்றது

மரணத்தை நிகழ்த்துவதற்கு எம் தேசத்தில் மனித மிருகங்களே இங்கு தயாராயி விட்டனர்

இந்நிலையில் மரணங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு தன்னுயிரை தந்து நின்றவர்களில் தோழன் சதீஸ் அவர்களும் ஒருவர் மரணங்களைத் தடுப்பதற்கான தியாக கேள்வியில் தானும் மரணமாகி தன்னுயிரை எம் தேசத்திற்காக தந்தவர்களில் ஒருவர் தோழன் சதீஸ்!

எவர் துயர்பட்டாலும்... யார் கொல்லப்பட்டாலும்.. தமக்கென்ன என்று வாழ்க்கின்றவர்கள் மத்தியில், தான் நேசித்த மக்களின் துயர் துடைப்பதற்கு, மனித உயிர்களின் மரணத்தை தடுப்தற்கு தானே விரும்பி தனக்கு சரியெனப்பட்ட வழிமுறையில் தன் பணி தொடர்ந்தவர் தோழர் சதீஸ்!

வீரம் மட்டும் இருந்தால் போதாது, விவேகமும் வேண்டுமென்று வீரிய சிந்தனைகளோடு மக்களின் விடியலுக்காக தன்னைத் தானே தயார் படுத்த எம்முடன் இணைந்து கொண்டவர் இவர்....
அழிவு யுத்தத்தில் இருந்து எமது மக்களை மீட்டு ஜனநாயகத்தை நோக்கியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதனா சேதத்தை நோக்கியும், அமைதிப்பூங்காவை நோக்கியும் நாம் தடைகளைத் தளர்த்து முன்நோக்கி சென்ற போது 2000 ஆம் ஆண்டு எம்முடன் பகுதி நேர உறுப்பினராக இணைந்து கொண்டவர் இவர்...

குறுகிய காலத்தில் இவர் பெற்ற ஆளுமையும், ஆற்றலும், மக்கள் மத்தியில் இருந்து கிடைத்த நற்சான்றுகளும், எமது கட்சி கொண்டிருந்த இவர் மீதான நம்பிக்கைகளுக்கும் தோழர் சதீஸ் அவர்களை முழு நேர உறுப்பினராக உருவாக்கி எடுக்க எமக்கு உறுதுணையாக இருந்திருந்தன.

எமது யாழ் தலைமை காரியாலயத்தில் மக்கள் தொடர்பாளர் அலுவலராக மக்கள் பணி புரிந்தவர், தினமும் எம்மைத் தேடி வரும் மக்களின் அவலங்களை விசாரித்து அவர்களது துயரங்களைப் போக்க உழைத்தவர்...

இறுதிக்காலத்தில் யாழ் திருமலை கப்பல் போக்குவரத்து சேவையில் கரிசனை காட்டி காரியம் ஆற்றியதால் மக்கள் மனங்களில் அழியாது பதிவானவர் இவர்.

மக்கள் என்றும் கடலில் இருந்து நீங்காமல் வாழும் மீன்களைப்போல் தோழர் சதீஸ் அவர்களும் மக்கள் மத்தியில் வாழ்ந்திருந்தவர் நாளை விடியும் நம் தேசம் என்ற நம்பிக்கையின் உயிர் மூச்சை சுவாசித்து, மக்களை நேசித்து இறுதிவரை வாழ்ந்தவர் தோழர் சதீஸ்!

யாழ், தீவக பிரதேசங்கள் பலராலும் கைவிடப்பட்ட நிலையில்... தீவக மக்கள் அவலங்களை சந்தித்துக்கொண்டிருந்த நிலையில்... ஏன் என்று கூட எட்டிப்பார்த்து கேள்வி கேட்பதற்கு யாரும் அற்ற சூழலில்... தேடிவந்து தீவக மக்களின் துயர் துடைத்த ஈ.பி.டி.பி யின் கரங்களை பலப்படுத்த தோழர் சதீஸ் அவர்கள் முடித்த பணி தொடர்ந்தவர்

ஆகவே... மக்களால் மட்டுமல்ல எமது கட்சியாலும் என்றும் மறக்கப்பட முடியாதவர் தோழர் சதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உயிர்களை யாராலும் அழிக்க முடியும். ஆனாலும் மனித மனங்களுள் உறங்கிக்கொண்டிருக்கும் உணர்வுகளை யாராலும் அழிக்க முடியாது. அவர்கள் கொண்டிருக்கும் கொள்கைகளை யாராலும் கொன்றழிக்க முடியாது! தன்நலமற்ற மக்கள் சேவையால் மக்கள் மனங்களில் இடம் பதித்த நினைவுகள் யாரும் அழிக்க முடியாது!

ஆகவே தோழர் சதீஸ் அவர்கள் தன் உணர்வுகளாலும், மக்களுக்கு ஆற்றிய தன் சேவைகளாலும், சுடர் விட்டு பிரகாசிக்கும் தன் கொள்கைகளாலும் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

இழப்பின் துயரத்தில் இதயம் கரைந்திருக்கும் அவரது குடும்பதினர், உறவுகள், நண்பர்கள் அனைவரோடும் நாமும் எம் துயரத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்

மலரப்போகும் சமாதான தேசத்திற்கு தன்னை வித்தாக விதைத்தவர் தோழர் சதீஸ்!


எம் தேசத்தின் தியாக வரலாற்றில் தோழர் ஆலாலசுந்தரம் சதீஸ் என்ற பெயரும் அழியாத சுவடுகளாகப் பொறிக்கப்படும்!

என்றும் அழியா நினைவு மரியாதையோடு

**தோழர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அமைச்சர்**
**செயலாளர் நாயகம்**
**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஈ.பி.டி.பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரியின் திருமணத்தின் போது சினேகிதருடன்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் நல் ஆசி

நெடுந்தீவு மேற்கை வாழ்விடமாகக் கொண்ட அமரர் ஆலாலசுந்தரம் - சதீஸ் இறைவன் அடி சேர்ந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆறுதலும் தேற்றலும் கூறி எமது பகற்பராமரிப்பு நிலையத்தில் பயின்ற மகிழ்ச்சியான கால நிகழ்வுகளை மனதில் துலாவ விட்டு ஒரு மனிதனுடைய வாழ்வு மரணத்துடன் முடிந்து விடுவதில்லை அது மரணத்தின் பின்னால் இறை சமூகத்தில் தொடங்கும் புதிய வாழ்வில் சங்கமமாகின்றது அவ்வாழ்வு இந்த சகோதரனுக்கும் கிடைக்க நமது ஆண்டவரை பிரார்த்தித்து இறைவனுடைய ஆறுதலும் வழிநடத்தலும் குடும்பத்தினர் யாவருக்கும் கிடைக்க பிராத்தித்து இந்தச் சகோதரரின் ஆன்மா நித்திய இளைப்பாறுதல் கிடைக்க பிரார்த்தித்து நிற்கின்றோம்.

நன்றி

**வண. போதகர்**
**R. ஜோண்செல்வம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிகள்

கடந்த 12.10.2006ம் திகதி அமரத்துவம் அடைந்த ஆலாலசுந்தரம் சதீஸ் அவர்கள் எம்முடன் சிலகாலம் பழகினாலும் அவரது கல்வி சார் பண்புகளை அவரிடம் காணமுடிந்தது இவரது தகப்பனார் அமரர் வேலுப்பிள்ளை ஆலாலசுந்தரம் அவர்கள் என்னுடன் படித்த நண்பரும் உறவினருமாவார் அவருக்கு அமரர் சதீஸ் அவர்கள் ஒரு மகனாவார் இந்நிலையில் சதீஸ் அவர்களின் ஒரே ஒரு சகோதரி தாய் தனித்த நிலையில் இருப்பதை எம்மால் சகிக்க முடியவில்லை இவரது இழப்பு இக் குடும்பத்திற்கு பேரிழப்பாகும்.

இவரின் பிரிவால் துயருறும் சகோதரி, மைத்துனர், தாய் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவரது ஆன்மா சாந்தியடைய நெழுவினி விநாயகரையும் கரமத்தைக் கந்தனையும் பிரார்த்திக்கின்றோம். நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம் க. கோபாலப்பிள்ளை நெடுந்தீவு.

பொதுமுகாமையாளர்
கூட்டுறவுச் சமூகம், சார்பில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

அமரர் ஆலாலசுந்தரம் சதீஸ் அவர்களின் மரணச் செய்தி வேதனை மிக்கது. நிறைந்த பண்பாடும், சிறந்த பழக்க வழக்கங்களும், நீண்டகல்விப் பாரம்பரியமும் மிக்க ஓர் நற்குடும்பத்தில் பிறந்த இவர் குடும்பத்தின் குலவிளக்காக, செல்லப்பிள்ளையாக திகழ்ந்தவர். தந்தையின் கண்டிப்பான பாசத்திலும், தாயின் சிறந்த பரிவிலும் நல்லொழுக்கமிக்க சகோதரிகளின் வழிகாட்டலிலும் சிறப்பாக வளர்ந்து வந்தவர்.

பள்ளிப் பராயத்தில் மாணவர்களுக்கு நல்ல முன்மாதிரியாய், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்கவராக பெரியோர்களுக்குப் பணிந்து நல்ல விழுமியங்களுடன் சிறந்து விளங்கியவர். இவரின் பண்பும், பண்பாடும் இவரைப் பலரிடமும் கவர்ந்திழுக்கும் தன்மை வாய்ந்ததாகக் காணப்பட்டது. தாயின் ஒரே ஒரு செல்ல மகனாக சகோதரிகளின் பாசச் சகோதரனாக மருமக்களின் ஆசை மாமாவாக இருந்தவரின் இழப்பு அக் குடும்பத்திற்கு ஈடுசெய்ய முடியாததாகும். அவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ச. சத்தியவரதன்**
**அதிபர்**
வைவப் பிரகாச வித்தியாலயம்,
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அமரர் ஆலாலசுந்தரம் சதீஸ் அவர்கள் இளம் வயதில் இறைவனடி சேர்ந்தமை அவருடைய குடும்பத்திற்கு தாங்க முடியாத ஓர் பேரிழப்பாகும்.

குடும்பத்தில் ஒரே மகனாக பிறந்து செல்லமாக வளர்ந்தவர். எமக்கு மிகமிக நெருங்கிய ஒரு உறவினர். அத்துடன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரும் ஆவார் இவர் பாடசாலையில் கல்வி கற்றகாலம் தொடக்கம் அமைதியான நற்பண்புள்ள மாணவனாக பலராலும் மதிக்கப்பட்டவர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதற் கொப்ப

அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அருமைத் தாய் சகோதரி குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

திருமதி. சா. கிஸ்ணதாஸ்
அதிபர்
மகாவித்தியாலயம்
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனில் என்றும் இளைப்பாறுவார்களாக

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்புக்கும், மதிப்புக்கும்முரிய அமரர் ஆலாலசுந்தரம் சதீஸ் அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு கவலையடைந்தேன். இவர் ஒருநல்ல குடும்பத்தைச் சேர்ந்தவரும், தனது சிறுவயதில் மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமெனவும் அவாக் கொண்டு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இணைந்து கொண்டார். இணைந்ததின் பிரதிபலிப்பாக மக்களுக்கென தனது மகத்தான சேவையை வெளிப்படுத்தி செயற்பட்டு வந்தார். எனவே இவரது சேவையை நாம் என்றும் மற்றகலாகாது.

இவர் இவ் மண்ணக வாழ்வை முடித்துக் கொண்டாலும், இறைவனின் அரவணைப்பில் என்றும் இருப்பார் என்பது உண்மை. இவரது இழப்பால் கவலையுற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் கடவுள் ஆறுதலைக் கொடுப்பார்.

இவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இயேசுபிரானை வேண்டி நிற்கின்றேன்.

**அதிபர்**
**அருட்சகோ: இக்னேசியா சூசைப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்களாய்......

நண்பனே
இறைவனின் கொடூரம்
உன்னை இளமையிலேயே
அணைத்துக் கொண்டதால்
அறிந்து கொண்டோம்
இருந்தும்
உனக்காக இறைவனை
நிதமும் தொழுகின்றோம்
நம்பிக்கையில்
சிரிப்பொலி ஊடே
மரணத்தை அணைத்துக் கொண்டாய்
எம்மை சிந்திக்க வைப்பதாய்
தினமும் கண்ணீரில்
நிந்திக்க வைத்துவிட்டாய்

அழுகின்றோம்
சமூகத்தில் உள்ள
பிணங்களாய் அல்ல
மனதுக்குள் நிஜங்களாய்

**பள்ளி**
**நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபத்திற்கு எந்த எண்ணெய் விட்டால் என்ன பலன்

**நெய் :**

தீபத்திற்கு நெய் விடுவது மிகச்சிறப்பு. சகலவித செல்வச் சுகத்தையும் வீட்டில் நலனையும் தருகின்றது.

**நல்லெண்ணெய் :**

நல்லெண்ணெய் விட்டு ஏற்றுவதல் எல்லாப் பீடைகளும் விலகி ஓடுகின்றது.

**கடலை எண்ணெய் :**

இதில் தீபம் ஏற்றுவது மிகவும் தவறு. அந்த வீட்டில் நித்திய கடன், துக்கம், பயம், சாராநாசம் பீடை இவைகளே சேரும்.

## திரியின் வகைகள்

**பஞ்சு :**

இதில் திரியிடுவது மிகவும் நல்லது.

**தாமரைத் தண்டு :**

இதைத் திரித்து ஏற்றுவது முன்வினை பாவத்தைப் போக்கும் செல்வம் நிலைத்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைத் தண்டு :

இதை நூல் பாகமாகப் பக்குவப்படுத்தித் திரியிட குழந்தைச் செல்வம் உண்டாகும். தெய்வக்குற்றம் குடும்பச் சாபம் முதலியவை நீங்கி சாந்தி உண்டாகும்.

## வெள்ளை எருக்கன் :

இதன் பட்டையைத் திரியாகச் செய்து தீபம்போட பெருத்த செல்வம் சேரும். பேய் பிடித்தவர்களுக்கு அதன் தொல்லைதீரும்.

## புதுமஞ்சள் சேலைத்துண்டு :


திருமணத்தடை, மலஉடுத்தன்மை, பைசாச செய்வினை தோசங்கள் நீங்கும்.

## புது வெள்ளைவஸ்திரம் :

இதில் பன்னீர் விட்டு காயவைத்து திரியாகப் பயன்படுத்த உத்தம பலனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசையான மருமகனுடன் மழலை பேசிய போது தான் ஆசையாக எடுத்த போது.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுக்கு உகந்த எண்ணெய்

| | | |
|---|---|---|
| மகாலட்சுமி | : | நெய் |
| நாராயணன் | : | நல்லெண்ணை |
| கணபதி | : | தேங்காயெண்ணை |
| ருத்ராதி தேவதை | : | இலுப்பை எண்ணை |
| தேவி | : | ஐந்துவகை எண்ணையக்களும் |
| சர்வதேவதைகள் | : | நல்லெண்ணை |

## முகம் ஏற்றுவதன் பலன்கள்

| | | |
|---|---|---|
| *ஒருமுகம் ஏற்றுவது* | – | *மத்திமபலன்* |
| *இரண்டு முகம் ஏற்றுவது* | – | *குடும்ப ஒற்றுமையைக் பெருக்கும்* |
| *மூன்று முகம் ஏற்றுவது* | – | *புத்திர சுகம் தரும்* |
| *நான்கு முகம் ஏற்றுவது* | – | *பசு பூமி இவற்றைத் தரும்* |
| *ஐந்து முகம் ஏற்றுவது* | – | *செல்வத்தைப் பெருக்கும்* |

*மண்ணால் செய்யப்பட்ட அகல் அல்லது வெள்ளி, பஞ்ச உலோகத்தால் செய்யப்பட்ட விளக்குகள் பூஜைக்கு மிகவும் உகந்தது.*

**நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய் இந்த ஐந்தும் கலந்து ஏற்றி எவன் ஒருவன் ஒரு மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்கின்றானோ அவனுக்குத் தேவியின் அருள் மந்திர சக்தி உண்டாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மையாளும் ஒன்பதின்மர்

1. சூரியன் :- எங்கள் தந்தையாரின் வாழ்க்கை, எமது ஆத்மபலம், எமது ஆற்றல், எமது செல்வாக்கு ஆகியவற்றிற்கு அதிபதி, எமக்கு ஒளியைத் தருபவர். உலகம் போற்றும் உத்தமர். பொழுதை விடிவிப்பவர் உணவை விளைவிப்பவர். ஒப்பற்றவர் நமஸ்காரப் பிரியர், ஞாயிறுதோறும் அவரை வணங்கி நல்வாழ்வு, ஞானம், ஒளி பெறலாம்.

2. சந்திரன் :- எங்கள் தாயாரின் வாழ்க்கை. எங்கள் அறிவு வளர்ச்சி, விவேகம், பெறுபேறுகள் ஆகியவற்றை அள்பவர்.

3. செவ்வாய் :- எங்கள் சகோதரர் நிலமை, காணி, நிலம், விவசாயம் வலிமை ஆளுமை ஆகியவற்றுக்கு முதல்வர்.

4. புதன் :- எங்கள் தாய் மாமன்மாரின் நிலமை, எமது கல்வி. வித்தை, விவேகம், அமைதி, அரசமதிப்பு, இவற்றைக் கண்காணிப்பவர்.

5. வியாழன் :- குருவானவர் என்று புகழ் பெற்றவர், எங்கள் பிள்ளைகளின் புகழ், மகிழ்ச்சி, உடல்நலம், செல்வம் ஆகியவற்றை ஆள்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வெள்ளி :- எங்கள் குடும்ப வாழ்க்கை ஆடை ஆபரணங்கள் சுகபோகங்கள், வண்டி வாகனங்கள், செல்வம், பேறு ஆகியவற்றை ஆண்டு கொடுப்பவர்.

7. சனி :- சிவபெருமானுக்கு அடுத்து ஈசுவரப் பெயர் பெற்றவர். பெரியவர், எமக்கு ஆயுளைத் தருபவர். ஆனால் குறுக்குப் பாதைகளையும் காட்டுபவர். ஆபத்துக்களையும் உண்டாக்கி விடுபவர்.

8. இராகு :- எங்கள் தந்தையாரின் முன்னோரைப் பாலிப்பவர். எமக்கு புத்தியோசனைகளை உண்டாக்குபவர் எமக்கு அடிமை, குடிமை, ஆதிக்கம் ஆகிய செல்வாக்குகளைத் தருபவர். ஆனால் எம்மைச் சிறைச்சாலைக்கும் அனுப்பிவிடுபவர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்வோம்

2006 ஒக்டோபர் 12ஆம் நாள் வியாழக்கிழமை இறைவனின்
அரவணைப்பில் சென்ற எமது குடும்பத்தின் ஒளி விளக்கு
அமரர் **ஆலாலசுந்தரம் சதீஸ்** அவர்களின்....
வைத்தியசாலையில் வந்து ஆறுதல் கூறியவர்கள் அஞ்சலிக்காக
வைக்கப்பட்ட இடங்களில் அஞ்சலி செலுத்தி மலர் வலயங்கள்
வைத்தவர்கள், வாகனங்கள் அனுப்பி ஆதரவு தந்தவர்கள், கடல்
வழிமார்க்கமாக வருவதற்கு போட் அனுப்பி உதவி செய்த M.P.C.S
உரிமையாளர்களுக்கும் இறுதிக்கிரிகைகளில் வாகனம்
அனுப்பியவர்கட்கும் வீட்டில் மலர் தூவியும் மலர் மாலை இட்டும் மலர்
வலயம் வைத்தவர்களுக்கும், தந்தி தபால் மூலம் தங்கள் அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் வெளிநாடு உள்நாடுகளில்
இருந்து அனுதாபம் கூறியவர்களுக்கும், தோழோடு தோழ் கொடுத்துக்
கொண்டு இருக்கும் உற்ற நண்பர்களுக்கும், அந்தியேட்டி வீட்டுக்
கிரிகைகள் நிகழ்வுகளில் கலந்து நின்று தேற்றிய அந்தணர்கள்,
பெரியார்கள், சுற்றத்தார் உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவர்க்கும் இம் மலரினை எமக்கு அச்சிட்டுத் தந்த தயா
அச்சகத்தினருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகள்
உரியதாகட்டும். கண்ணீர் அஞ்சலி தந்துதவிய ஆசிரியர்கள், மற்றும்
சமய குருமார்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



நெடுந்தீவு.

இங்ஙனம்
அன்பான அன்னை,
அன்புச் சோதரிகள்,
அத்தார்கள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org